# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 34/2020**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | .. சாந்தி | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. தனபால் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. 52 | ஜாதி | .. | |
| கிராமம் | .. பள்ளக்குழி அக்ரஹாரம் | நாள் | .. | 17.10.2022 |
| வட்டம் | .. திருச்செங்கோடு | | | |

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் நாள் திங்கட்கிழமை திருமதி. சாந்தி க/பெ. தனபால் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**2, 3 பிரதிவாதி தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி ஆவேன். நான் இவ்வழக்கில் 2,3 பிரதிவாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து இருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 02.02.1980 தேதியிட்ட ரங்கையகவுண்டர், பெருமாள்கவுண்டருக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 12.08.2022 தேதியிட்ட ரங்கையகவுண்டரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது (வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று கூறி வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.த.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /சாந்தி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.